Registered as a Newspaper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் தினசரி
Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 21 | ( 06-12-93 ) | திங்கட்கிழமை | ஓசை 291

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-6-12-1993
யாழ்ப்பாணம்

## பௌத்தமதத்தை இழிவு படுத்திய தம்பையாவை தண்டிக்குக

பௌத்த மதத்திற்கு மாசுகற்பிக்கும் விதமாக நூல் எழுதிய தம்பையாவை தண்டிக்கவேண்டும். தேசத் துரோகியாகப் பிரகடனப்படுத்த வேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. டிக்சன் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக நூல் எழுதிய சால்மான் ருஷ்டிக்கு ஈரானிய மதத் தலைவர் மரணதண்டனை விதித்தார். இது சரியான செயலே என அவர் அங்கு மேலும் தெரிவித்தார். திரு. தம்பையா பௌத்த மதத்தின் இனவாதக் கொள்கையை வெளிப்படுத்துமாப்போல் ஆங்கில நூல் ஒன்றை சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ளமை தெரிந்ததே.

## குருநகர் - பாஷையூரில் விமானப்படை அனர்த்தம்

# மிலேச்சத்தனமான குண்டுவீச்சு தாக்குதல்;

# 25 அப்பாவி பொதுமக்கள் உடல்சிதறிப் பலி!

## 70க்கும் மேற்பட்டோர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

**குருநகர், பாஷையூர் பகுதிகள்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று நடத்திய மிலேச்சத்தனமான குண்டுவீச்சில் இருபத்தைந்து அப்பாவிப் பொது மக்கள் உடல்சிதறிப் பலியாகினர். 70ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர். நேற்றுக் காலை சுமார் ஒருமணிநேர இடைவெளியில் நடத்தப்பட்ட இரு தாக்குதலில் 50ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களும் நாசமடைந்தன.**

நேற்றுக்காலை சுமார் 9 மணியளவில் குடாநாட்டின் வான்பரப்பில் காணப்பட்ட சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு சியாமாச்செட்டி விமானங்கள் முதலாவது தாக்குதலை நடத்தின. முதலாவது தாக்குதல் குருநகர் சவக்காலைச் சந்திக்கு சற்றுத் தெற்காக இருந்த குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டது. இத் தாக்குதலின்போது ஒரே தடவையில் இரு குண்டுகள் வீசப்பட்டன. இத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தாயும் இரு பிள்ளைகள் உட்பட பலர்கொல்லப்பட்டனர். வீடுகள் பலவும் நாசமடைந்தன.

இதேவேளை இரண்டாவது குண்டுவீச்சு குருநகர்-சின்னக்கடை சந்தைக்கருகில் இடம்பெற்றது. இப் பகுதி மீதும் ஒரே தடவையில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. இக் குண்டுவீச்சின்போது சந்தைக்கு சென்றுகொண்டிருந்தவர்கள், கடைகளில் இருந்தவர்கள், வீடுகளில் இருந்தவர்கள் என பலர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயமும் அடைந்த

(3ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் பகுதி மீதான தாக்குதலில் 23 பொதுமக்கள் கோரப் பலி

## மனித சடலங்கள் நிறைந்த களமாக மாறிய வைத்தியசாலை

யாழ். போதனா மருத்துவமனை நேற்று திடீரென மனிதச் சடலங்கள் நிறைந்த, மரண ஓலங்கள் ஒலிக்கும் களமாக மாறியது.

நேற்றுக்காலை 9.00மணியளவில் யாழ். நகரக் கரையோரப் பகுதிகளில் விமானப் படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மேற்படி நிலை உருவாகியது.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட பல்வேறு வயதுடைய மக்கள் காயமடைந்த நிலையிலும் மரணமடைந்த நிலையிலும் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டனர்.

கைகள், கால்கள் முறிந்த நிலையிலும், தலை சிதறிய நிலையிலும், உடல் முழுவதும் சல்லடைபோட்டுத்துளைத்த நிலையிலும் காயமடைந்த பலர் மருத்துவமனை

(3ஆம் பக்கம் பார்க்க)

## போருக்கு முகங்கொடுக்க முடியாத அரச பயங்கரவாதத்தின் செயல்!

### - விமானக் குண்டுவீச்சுக் குறித்து இமானுவல் அடிகள்

போருக்குநேரடியாக முகம் கொடுக்க முடியாத நிலையில் அரச பயங்கரவாதம் அப்பாவி ... க்க குரு முதல்வர் அருட்திரு இமானுவல் அடிகளார் குறிப்பிட்டார் ... கூறினார். குண்டுவீச்சு நடந்த இடத்தை பின்பு வந்து பார்த்த போது பாஷையூர்

## களமாக மாறிய வைத்தியசாலை

யாழ். போதனா மருத்துவமனை நேற்று திடீரென மனிதச் சடலங்கள் நிறைந்த, மரண ஓலங்கள் ஒலிக்கும் களமாக மாறியது.

நேற்றுக்காலை 9.00மணியளவில் யாழ். நகரக் கரையோரப் பகுதிகளில் விமானப் படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து மேற்படி நிலை உருவாகியது.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட பல்வேறு வயதுடைய மக்கள் காயமடைந்த நிலையிலும் மரணமடைந்த நிலையிலும் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டனர்.

கைகள், கால்கள் முறிந்த நிலையிலும், தலை சிதறிய நிலையிலும், உடல் முழுவதும் சல்லடைபோட்டுத்துளைத்த நிலையிலும் காயமடைந்த பலர் மருத்துவமனை

(3ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

**குருநகர், பாஷையூர் பகுதிகள்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று நடத்திய மிலேச்சத்தனமான குண்டுவீச்சில் இருபத்தைந்து அப்பாவிப் பொது மக்கள் உடல்சிதறிப் பலியாகினர். 70ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்தனர். நேற்றுக் காலை சுமார் ஒருமணிநேர இடைவெளியில் நடத்தப்பட்ட இரு தாக்குதலில் 50ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களும் நாசமடைந்தன.**

நேற்றுக்காலை சுமார் 9 மணியளவில் குடாநாட்டின் வான்பரப்பில் காணப்பட்ட சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு சியாமாச்செட்டி விமானங்கள் முதலாவது தாக்குதலை நடத்தின. முதலாவது தாக்குதல் குருநகர் சவக்காலைச் சந்திக்கு சற்றுத் தெற்காக இருந்த குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டது. இத் தாக்குதலின்போது ஒரே தடவையில் இரு குண்டுகள் வீசப்பட்டன. இத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தாயும் இரு பிள்ளைகள் உட்பட பலர்கொல்லப்பட்டனர். வீடுகள் பலவும் நாசமடைந்தன.

இதேவேளை இரண்டாவது குண்டுவீச்சு குருநகர்-சின்னக்கடை சந்தைக்கருகில் இடம்பெற்றது. இப் பகுதி மீதும் ஒரே தடவையில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. இக் குண்டுவீச்சின் போது சந்தைக்கு சென்று கொண்டிருந்தவர்கள், கடைகளில் இருந்தவர்கள், வீடுகளில் இருந்தவர்கள் எனப் பலர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயமும் அடைந்த

(3ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் நாளை மறுதினமும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## போருக்கு முகங்கொடுக்க முடியாத அரச பயங்கரவாதத்தின் செயல்!

### - விமானக் குண்டுவீச்சுக் குறித்து இமானுவல் அடிகள்

போருக்குநேரடியாக முகம் கொடுக்க முடியாத நிலையில் அரச பயங்கரவாதம் அப்பாவி மக்கள் மீதும் வணக்க ஸ்தலங்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்படுகிறது இது அரசபடைகளின் கீழ்த்தரமான காடைத்தனமான செயல். இவ்வாறு நேற்று நடைபெற்ற விமானத்தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்த யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் அருட்திரு இமானுவல் அடிகளார் குறிப்பிட்டார்

நேற்றுக்காலை பாஷையூர் குருத்துவக்கல்லூரி நோக்கி நடத்தப்பட்ட குண்டுவீச்சை தாமும் வண ஆயர் அம்பலவாணரும், அருட்தந்தை ஜெபநேசனும் மற்றும்பலரும் புனிதயுவானியார் ஆலயமுன்றலில் நின்று பார்த்துக் கொண்டு நின்றதாகவும் அவர் கூறினார். குண்டு வீச்சு நடந்த இடத்தை பின்பு வந்து பார்த்த போது பாஷையூர் குருத்துவ கல்லூரிக்கு மிக அண்மையிலும் திருச்சிலுவை கன்னியர் மடத்திற்கு அருகிலும் குண்டுகள் வீழ்ந்துசேதம் ஏற்படுத்தியிருந்தது பாஷையூர் குருத்துவ கல்லூரி ஓடுகளை குண்டுச் சிதறல்கள் துளைத்துள்ளதுடன் கண்ணாடிகளும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் பகுதி மீதான தாக்குதலில் 23 பொதுமக்கள் கோரப் பலி

(நமது நிருபர்)

குருநகர் சின்னக்கடைப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது சிறிலங்கா விமானப்படையின் சியாமாசெட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு தாக்குதல்களினால் 23 பொதுமக்கள் உடல்சிதறிப் பலியானதுடன் 47 பேர் படுகாயமடைந்தனர். ஐந்து வீடுகள் தரைமட்டமானதுடன் 20ற்கு மேற்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள், ஆலயம் மற்றும் சந்தை ஆகியனவும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் குருநகர் பகுதியை வட்டமிட்ட இரு குண்டுவீச்சு விமானங்கள் அடுத்தடுத்து இரு குண்டுகளை வீசின. இதில் முதலாவது குண்டு தேன்நதி பேக்கரி மீதும் இரண்டாவது குண்டு சென்றோக்ஸ் சனசமூக நிலைய அருகாமையில்

(3ஆம் பக்கம் பார்க்க)

## பாஷையூர் குண்டு தாக்குதலில் 2 பேர்பலி; 24 பேர் காயம்

சிறிலங்கா விமானப் படையின் இரு சியாமாசெட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் பாஷையூர் மக்கள் வாழ்விடங்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்ட குண்டுவீச்சுகளினால் இருவர் பலியானதுடன் 24 பேர் காயமடைந்ததுடன் குருக்கள்மடம், கன்னியர்மடம், வயோதிபர் இல்லம் உட்பட 20 வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10 15 மணியளவில் பாஷையூர் கடற்கரையை அண்டிய பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் வீடொன்றின்மீது வீசிய இரு குண்டுகளினால் இருவர் பலியானதுடன் 14 பேர் படுகாயமடைந்தனர் இப் பகுதியில் இருந்த இரு வீடுகள் தரைமட்டமானதுடன் பதினாறு வீடுகளும், திருச்சிலு

(3ஆம் பக்கம் பார்க்க)

## குழம்பிப்போயுள்ள ராணுவத்தால் புலிகளை எதிர்கொள்வது கடினம்

### பி. பி. ஸியின் கணிப்பீடு

(லண்டன்)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு முடிவுகாண தேவையான அவசியமான பெரும் தாக்கத்தை கொடுக்கும் நிலையில் இராணுவம் இப்போது இல்லை என்பதையே இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்னா இராஜினாமாச் செய்வது எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் சியாகா நுவோசு சிறிலங்கா இராணுவத்தின்நிலை என்ற தலைப்பில் எழுதிய செய்தி ஆய்வுரையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது; இராணுவத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தளபதி பதவி ஜெரிக்கு கிடைக்கலாம்!

(கொழும்பு)

தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவின் பதவி விலகலை அடுத்து இப்போது சீப் ஒவ் ஸ்ராபாக இருக்கும் ஜெரி டி. சில்வா இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்பார் என கொழும்புப் பத்திரிகைகள்


(3ஆம் பக்கம் பார்க்க)

## சிசிலின் ராஜினாமா ஜனாதிபதியிடம் ஒப்படைப்பு

சிறிலங்கா இராணுவத்தளபதிலெப்.ஜெனரல்சிசில்வைத்தியரெட்னா தாம்இராஜினாமாச் செய்து கொள்வதாகத் தெரிவிக்கும்கடிதத்தை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைத்திருப்பதாகநேற்றுக் காலை அகில இந்திய வானொலி கூறியது எனினும் இது தொடர்பாக ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவே எந்த முடிவையும் எடுக்க வேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

**உருவப்படம் உள்ளே**

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவு அடைந்தமுல்லைமாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்புவின் உருவப்படம் உள்ளே...



சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குருநகர் - பாசையூர் பகுதிகளில் நேற்றுக்காலை நடாத்திய தாக்குதலின் போது தரைமட்டமாகிய பொதுமக்களின் குடியிருப்புக்களை படத்தில் காணலாம்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மீன் தொட்டிகள், கண்ணாடி (கடை) சோகேஸ், கோப்பி அரைக்கும் மெஷின் மோட்டார்கள், ஆங்கில தட்டச்சுகள், மர & இரும்பு அலுமாரிகள், T. V., கட்டில்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: டாஸ்கொம்ப்ளெக்ஸ். 161, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகாமை), யாழ்ப்பாணம் (6735)

## ஒய்வூதிய திகதிகள் அறிவிப்பு

1994ஆம் ஆண்டு ஒய்வூதியம் வழங்கப்படும் நாட்கள் பற்றிய விபரத்தை ஒய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் ஆர், டபிள்யூ பியசேன சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்,

ஒய்வூதியம் வழங்கப்படும் நாட்களின் விபரம் வருமாறு ஜனவரி - 11, பெப்ரவரி 15, மார்ச்08, ஏப்ரல் 05, மே10, யூன் 14, யூலை 12, ஆகஸ்ட் 10, செப்டம்பர் 13, ஒக்டோபர் 11, நவம்பர் 15, டிசம்பர் 13.

## தட்டச்சு திருத்துதல் பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தட்டச்சு திருத்துதல் எனும் குறுங்கால பாடநெறி இம் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினர் தெரிவித்தனர்.

இப்பாடநெறி தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறும் இதில் குறைந்தது தினமும் ஆறு மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சி நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி யாழ்நகரில் அமைந்துள்ள பயிற்சி நிலையமொன்றில் நடைபெறும் இதற்கான விண்ணப்பம் தொடர்பாக முறைசாராக்கல்விப்பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (பா)

## காசநோய் விடுதி கோப்பாயில்

மயிலிட்டி காசநோய் விடுதி தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வருகிறது சமீப காலமாக மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து சங்கானை அரசினர்


### சந்திப்பு

வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

நாளை 07. 12. 93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அரசியல்துறை தொழிற்சங்கப் பகுதியினர் கோண்டாவிலில் அமைந்த விடுதலைப்புலிகள் தலைமைச் செயலகத்தில் யாழ் மாவட்ட அனைத்து வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்களையும் ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

நன்றி.

(6769) - செயலாளர்.



### யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரியில் மேலதிகபயிற்சி நெறிகள் --1994

பின்வரும் பயிற்சி நெறிகளை 1994-ம் கல்வியாண்டில் பயில்வதற்கான விண்ணப்பங்களை1993-12-20-ம் திகதி வரை 'அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் தகுதியுடையவர்கள் அனுப்பி வைக்கவும்.

பயிற்சிநெறி

1. உயர் தேசிய வணிகத் தேர்வு
2. வியாபாரமும் நிதியியலுமான தேசிய டிப்புளோமா

மேலதிக விபரங்களை அறிய யாழ். தொழில்நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

(சி-8065)


### ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1929-10-29

இறப்பு: 1992-12-06

திருமதி அருளப்பு திரேசம்மா

## பருத்தித்துறை இறங்குதுறை கடற்கொந்தளிப்பால் சேதம்

பருத்தித்துறைப் பகுதியில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடும் காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக பருத்தித்துறை இறங்குதுறை சேதமடைந்து வருகிறது. கடல் நீர் அலைகள் இறங்கு துறைப் பகுதியில் மோதி இறங்கு துறையை சேதப்படுத்தி வருகிறது.

தொடர்ந்தும் இதே நிலை ஏற்படுமானால் இறங்குதுறையில் ஏற்படும்பாதிப்பு மேலும் அதிகரிக்கும். அதே சமயம் கடந்த வெள்ளிக்கிழமை கடும் காற்று வீசியதையடுத்து கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் முற்றாகச் செயலிழந்தன.

பொருள்களை இறங்குவதற்கென வந்த 'வாதுவ' கப்பலும் இறக்கமுடியாத நிலையில் காங்கேசன்துறைக்குச் திரும்பிச்சென்றது.


### தேவை

மொழிபெயர்ப்பாளர்கள்

ஆங்கிலம் -- தமிழ்

தொழில்நுட்பம், இலக்கியம், அரசியல், திரைப்படமொழிமாற்றம் ஆகிய துறைகளில் அனுபவமுள்ளோர் விண்ணப்பிக்கவும். வீட்டிலிருந்து கொண்டே பணியாற்ற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

அழகியற்பாணி எழுத்தர்கள்

புத்தக முகப்பு அட்டை உருவாக்கத்தில் முன் அனுபவம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு

விளம்பர இல. 208
மே-பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(6776)


### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## பலாலியிலிருந்து 16 பேர் விடுதலை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலையான சுமார் 16 பேரில் 14 பேர் யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளனர். மிகுதி இருவரும் திருகோணமலை செல்லவுள்ளனர்.

பெயர் விபரங்கள் வருமாறு-


இதில் யாழ்ப்பாணம் வரவுள்ள 14 பேரின் விபரம் பின்வருமாறு. மரியநாயகம் சந்தியப்பா யாழ்ப்பாணம், றோமர் லேல்டர் கெனடி யாழ்ப்பாணம், துரைச்சாமி சிவசோதி வல்வெட்டித்துறை எட்வேட் எட்வின் பருத்தித்துறை, சிவலிங்கம் வசந்தகாந்தன்பருத்தித்துறை, குலிங்டன் அமலதாஸ் யாழ்ப்பாணம், கந்தசாமி கருணன் யாழ்ப்பாணம், தோமஸ் பிலிப்ரைன்ஸ் யாழ்ப்பாணம், ஜேம்ஸ் குலிங்டன் யாழ்ப்பாணம், செல்வம் சகாயதாஸ் யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் ராஜன் பருத்தித்துறை, யாகப்பு ஆசைமுத்து பருத்தித்துறை, இரட்ணம் இரவி சங்கர் யாழ்ப்பாணம், சிங்காரவேல் சிவஞானசுந்தரம் பருத்தித்துறை.

## சமூக சேவையில் ஈடுபட்டனர்

(பருத்தித்துறை)

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் பிறந்த தின விழாவையொட்டி வியாபாரி மூலை சத்திய சாயி நிலையத்தினர் பல்வேறு சமூக சேவைப் பணிகளிலும் வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டனர். (25)


### 2-ம் ஆண்டு 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



முத்து சின்னப்பு (தம்பர்)

சின்னப்பு பாக்கியநாதன்
(முன்னாள் பிரதம கணக்காளர், பிறவுன் அன் கொம்பனி, கொழும்பு)

09.12.1909 <- மண்ணில் -> 29 12 1939
02.12.1991 <- விண்ணில் -> 06.12.1992

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே''

116, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்,
உறவினர்கள். (6729)


### நினைவு கூருகின்றோம் ...

1993-12-06

இப்பாடநெறி தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறும் இதில் குறைந்தது தினமும் ஆறு மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சி நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி யாழ்நகரில் அமைந்துள்ள பயிற்சி நிலையமொன்றில் நடைபெறும் இதற்கான விண்ணப்பம் தொடர்பாக முறைசாராக்கல்விப்பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (பா)

## காசநோய் விடுதி கோப்பாயில்

மயிலிட்டி காசநோய் விடுதி தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வருகிறது சமீப காலமாக மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் போதிய இடவசதியின்றி இயங்கி வந்த மேற்படி காசநோய் சிகிச்சைப் பிரிவு சுகாதார சேவைகள் பிரிவுப் பணிப்பாளரின் உத்தரவுக்கமைவாக கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கான ஆக்க ஓவியப் போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழா சித்திர ஆசிரிய ஆலோசகர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை சான்றிதழ்களை வழங்கினார். (25)

## மாவீரர் நினைவாக வீதிக்குபெயர்மாற்றம்

(பருத்தித்துறை)

புலோலிமேற்கு வாணக் குடியிருப்புகலட்டி வீதிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்த மாவீரர் லெப்டினன்ட். வைதேகி ஞாபகார்த்தமாக சீதாலட்சுமி வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (25)

## பொருட்காட்சி

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் பல்துறை சார் பொருட்காட்சி இரு நாட்கள் நடைபெற்றது. இப் பொருட்காட்சியில் விஞ்ஞானம், சித்திரம், மனையியல், மரவேலை, எலெக்றோனிக் என்பன முக்கிய இடங்களை வகித்தன. இப் பொருட்காட்சிகல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றது. (25)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1929-10-29

இறப்பு: 1992-12-06

### திருமதி அருளப்பு திரேசம்மா

அன்பின் உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய்
பாசத்திற்கிலக்கணமாய் வாழ்ந்த எம்
அன்புத் தாயே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்த போதும்
உமை விட்டு எம் மனம் பிரியவில்லை
உம் பிரிவில் ஓராண்டு சென்ற போதும்
எம் மனத்தில் நீர் பல்லாண்டு வாழ்கின்றீர்
உமது ஆன்ம சாந்தியை வேண்டி நிற்கும்

4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(6760)



### செல்வன் செ. சுமணன்

மலர்வு: 20-05-1991

உதிர்வு: 17-11-1992

06-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

நித்திவீதி, கரம்பைக் குறிச்சி, வரணி.

தந்தை
மா. செல்வராசா குடும்பத்தினர்

(சி-8063)



### முத்து சின்னப்பு (தம்பர்) — சின்னப்பு பாக்கியநாதன்

(முன்னாள் பிரதம கணக்காளர், பிறவுன் அன் கொம்பனி, கொழும்பு)

| | | |
|---|---|---|
| 09.12.1909 | <- மண்ணில் -> | 29 12 1939 |
| 02.12.1991 | <- விண்ணில் -> | 06.12.1992 |

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் ததுவே''

116, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்,
உறவினர்கள். (6729)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
01-12-1924

ஆள்பவன் அழிப்பு
06-12-1992



அமரர்

### தம்பர் காசிப்பிள்ளை முருகேசு (தம்பு)

கிளாலியில் உறங்கினை
கீழவர் செய்கையால்
முழுமதி யெனவரும்
முதல்வனே மடிந்தனை
கொடுமைகள் முடியும்
கொடியது உயரும்
அதுவரை அமைதிகொள்
அன்புடன் நினைக்கின்றோம்.

கனகரட்ணம் வீதி, வட்டுக்கோட்டை.

(6781)

மனைவி, மக்கள்
மருமக்கள்

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
13-02-1945

உதிர்வு
06-12-1992

அமரர்

### கார்த்திகேசு சுந்தரலிங்கம்

(ஓய்வு பெற்ற உதவி தபால் அதிபர்)

அன்பின் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாதையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

கமலகிரி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

(6757)

தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-12-06

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-கரவெட்டி தச்சன்தோப்பில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சுருளி** (முருகன் சிவராசா - காட்டுப்புலம் கரவெட்டி கிழக்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு பழுகாமம் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் றொபேட்** (சங்கரப்பிள்ளை கருணாகரன் காரைதீவு-02 -அம்பாறை)

**கோல்ட்** (கணபதி ரவி - பாண்டிருப்பு, கல்முனை-அம்பாறை)

**வேணு** (குஞ்சுத்தம்பி தயாளன் - கொம்மாந்துறை, செங்கலடி - மட்டு)

**சியாத்** (மீசராசாகி காலிதீன் - 552, சாந்தமருது-அம்பாறை)

**யசோ** (செல்லையா தங்கராசா - தம்பிலுவில்-அம்பாறை)

**அஸ்வர்** (ஜபார் ஜாமீர் - அட்டாளைச்சேனை அம்பாறை)

1990ஆம் ஆண்டு பருத்தித்துறை நகர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட கற்கோவளத்தைச் சேர்ந்த பெண், மயிலிட்டியைச் சேர்ந்த இருவர் மற்றும் ஆசிரியர் உட்பட 05 தமிழர்கள்.

சாவகச்சேரி, சரசாலைப் பகுதி பல நோ. கூ. சங்கத்தில் நிவாரணம் பெறுவதற்காக நின்ற மக்களின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்

பலாலி முகாமிலிருந்து உரும்பராய்ப் பகுதி பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட தாய், மகன் உட்பட 02பேர்.

மட்டு -ஆரையம்பதி பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன், 35ஆம் கிராமத்தில் மரம் வெட்டச் சென்றபோது சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02தமிழர்கள், கல்குடாப் பகுதிக்குச் செல்லும் வழியில் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட கல்குடா மகாவித்தியாலய அதிபர்.

1991ஆம் ஆண்டு திருமலையில் பலகிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான பொதுமகன்

1992ஆம் ஆண்டு கிளாலி கடற்பரப்பில் பலியான காரைநகரைச் சேர்ந்த படகோட்டி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8066)

சிந்தனைக்கு

அழ முடியவில்லை என்னால்; ஆனால்
இதயம் இரத்தத்தை கசிகிறது.

வில்லியம் சேக்ஸ்பியர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# பௌத்தபேரினவாதத்தின் வெறித்தனம்.

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மீண்டும் ஒரு தடவை தமது அரக்கத்தனத்தைத் தமிழ்மக்கள்மீது காட்டியுள்ளன. நேற்றுக்காலை குருநகர், பாஷையூர் பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் இருபத்தைந்து அப்பாவிமக்கள் கொல்லப்பட்டதோடு, 70க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துமுள்ளனர். பல வீடுகள், கடைகள் என்பனவும், பெருமளவு சொத்துக் களும் சேதமடைந்துள்ளன.

சிறிலங்கா விமானப்படை புரிந்த இந்த அனர்த்த மானது திட்டமிட்ட இனப்படுகொலை என்பதிலும், எவ்வளவு அதிக தொகையில் தமிழ்மக்களைக் கொல்லமுடியுமோ அவ்வளவு தொகையில் கொல்வதற்கு மேற் கொள்ளும் முயற்சி என்பதிலும் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை. அத்தோடு, ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என்றும் கொள்ளமுடியும்.

சிறிலங்கா விமானப்படை அண்மைக் காலத்தில் பொதுவாக மக்கள் செறிவுள்ள -அடர்த்தி அதிகமுள்ள- பகுதிகளை நோக்கியே தாக்குதல்களை நடத்திவருகின்றது. இதன் அடிப்படையில், குடியிருப்புக்கள் அதிகம் மிக்கபகுதிகள், மக்கள் திரளாகக்கூடும்சந்தைகள், பொது இடங்கள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் பாடசாலைகள் என்பனவற்றின் மீதே தாக்குதல்களை நடத்திவருகின்றது. அண்மைக் காலக் குண்டுவீச்சுக்கள் நடைபெற்ற இடங்களை அவதானிப்பின் இதனை சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

குருநகர் பகுதியில் சிறிலங்கா விமானப்படை அண்மையில் நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும். இரண்டு தாக்குதல்களிலும் தலா பத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்துமுள்ளனர். இதற்கு அப்பகுதியில் காணப்பட்ட நெரிசலான குடியிருப்புக்களே காரணமாக அமைந்தது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சன அடர்த்திமிக்க பகுதிகளில் குருநகர், பாஷையூர் என்பன முக்கியமான பகுதிகள் ஆகும். இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்த விதத் தாக்குதலும் பல உயிர்களைப் பலி எடுக்கும்

# அரசியலமைப்பு சீர்திருத்தம் மூலம் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு

-கே. என். சொக்ஸி

(கொழும்பு)

அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைச் செய்வதன் மூலமாக வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமாதான பூர்வமாகத் தீர்வு காணப்படல் வேண்டும். இதற்கு ஓர் ஆரம்பமாக பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையைக் கொள்ளலாம். இவ்வாறு அரசியலமைப்பு விவகார நிபுணரும், அரசியலமைப்பு விவகார ராஜாங்க அமைச்சருமான கே.என். சொக்ஸி கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் தமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், அரசியலமைப்பை ஓர் இறுக்கமான கெட்டித்த ஆவணமாக எவரும் கருதக்கூடாது. மனித முயற்சிகளில் புதிய சிந்தனைகள் நாளாந்தம் தோன்றிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் சமூக நிலைமைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப அரசியலமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்படலாம். அரசியலமைப்பை ஒரு கட்சிக்கு மட்டுமே உரிய ஆவணமாகக் கருத முடியாது அது சகல பிரஜைகளுக்கும் ஒரே மாதிரியானது. அரசியலமைப்பு ஓர் உயிர்த்துடிப்புள்ள சட்டமாக இருக்கவேண்டுமேயன்றி நிலையான ஒன்றாக இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

**மனித**

க்கு எடுத்துவரப்பட்டனர். சிலரது உடல்கள் முற்றாக சிதைவடைந்த நிலையில் எடுத்துவரப்பட்டன. துண்டிக்கப்பட்ட கைகள், கால்கள், சிதறிய நிலையில் காணப்பட்ட தலை ஆகியனவும் தனித்தனியாக எடுத்துவரப்பட்டன.

குருநகர் சின்னக்கடைச் சந்தைப் பகுதியில் சிதறிக் கிடந்த மனித தசைத்துண்டுகள் கூட்டி வாரி அள்ளப்பட்டு உரைப்பை ஒன்றில் போடப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட குண்டுச்சன்னங்களால் சல்லடைபோடப்பட்ட சடலங்கள் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் ஆங்காங்கே அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அடுக்கிவைக்கப்பட்ட சடலங்களுக்கு அருகில் இறந்தவர்களது உறவினர் சிலர் ஓலம் எழுப்பிய வண்ணமிருந்தனர்.

சில சடலங்கள் சுவர் ஓரங்களில் அநாதரவாகக் கிடந்தன. சிலரதுசடலங்கள் உருக்குலைந்து அடையாளம் காணமுடியாதவாறு அங்குமிங்குமாகக் கிடந்தன. சிறு சிறு கல்லுக் குறுணிகள் மற்றும் கட்டட இடிபாடுகளின் சிறு சீமெந்துத் துண்டுகள் ஆகியவற்றுடன் கூட்டி வாரி

# தமிழ் ராணுவ அதிகாரியும் பூநகரியில் கொல்லப்பட்டார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பூநகரி முகாம் தகர்ப்பின் போது தமிழ் இராணுவ அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

சார்ஜன் மேஜர் எஸ். இருதயநாதனே அவராகும். இவர் பூநகரியில் காயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது இறந்தார்.

கடந்த 25ஆம் திகதி கொழும்பு கனத்தையில் இராணுவ மரியாதையுடன் இவரது இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

கொழும்பு வனாத்த முல்லையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1980 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சாதாரண சிப்பாயாக இராணுவத்தில் இணைந்து கொண்டார். ஏ 3 ரயரட்ட ரைபிள் அணியில் பயிற்சி பெற்ற இவர் பாகிஸ்தானுக்குச் சென்றும் விசேட பயிற்சி பெற்றுள்ளார்.

பெரிய சுடுகலன்களை இயக்குவதில் கைதேர்ந்தவர் என இராணுவ உயர் அதிகாரிகளினால் பாராட்டுப் பெற்றவர்.

12 வருட சேவைக்காலத்தில் வடக்கில் போர் முனையில் நீண்ட காலம் இருந்துள்ளார்.

# 50வருடங்கள் சென்றாலும் யுத்தத்தால் பிரச்சினை தீராது

## யாழ். அரச அதிபர்

(கொழும்பு)

அரசியல் தீர்வை மறந்து யுத்தத்தினால் மட்டும் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்என நினைத்துச் செயற்பட்டால் இன்னும் ஐம்பது வருடங்கள் சென்றாலும்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சந்தேசிய வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும் போது; அரசாங்கமும் சமாதானம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டும். போரினால் தீர்வு காணவே அரசு முற்படுகிறது. எனவே இதனைவிட்டு சமாதானம் என்ற ரீதியில் மட்டும் பேசுவது நல்லது. யுத்தம் ஐம்பது வருடங்கள் நீடிக்குமானால் பொதுமக்கள் பலர் இறப்பர். யுத்தத்தின் மூலம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற அரசாங்கம் நினைக்குமானால் ஒருலட்சத்திற்கும் மேலான உயிரிழப்பு ஏற்படும்.

விமானத் தாக்குதல்களை நிறுத்தி, மின்சாரவசதிகளை ஏற்படுத்தி சாதாரண மக்களின் வாழ்க்கையை சீராக்கித் தருமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறேன். என்றார்.

**மிலேச்சத்**

னர். குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இவ்விரு குண்டு வீச்சிலும் 23பேர் கொல்லப்பட்டனர்.

இவ்விரு தாக்குதல்களையும் அடுத்து இரண்டு விமானங்களும் திரும்பிச்சென்றன. இதைத்தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதியை நோட்டமிட்டுச் சென்றது.

இதன்பின்னர்சுமார் 10-15 மணியளவில் மீண்டும்அப் பகுதிக்கு வந்த இரண்டு சியாமாச்செட்டி விமானங்கள் பாஷையூர் பகுதியில் தாக்குதலை நடத்தின. இத் தாக்குதல்களின் போதும் இரு தடவைகளில் நான்கு குண்டுகள் வீசப்பட்டன. இதில்

# போரிடும்படையினருக்காக விசேட நிதியம் உருவாக்கம்!

வடக்கு கிழக்கில் போரிடும் படையினருக்கான விசேட நிதியம் ஒன்றை உபாலி பத்திரிகை நிறுவனம் ஆரம்பித்துள்ளது. போரில் காயமடையும், மரணமடையும் படையினரை சார்ந்து இருக்கும் உறவினரை பராமரிக்கும் முகமாகவே இந் நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உபாலி பத்திரிகை நிறுவனமும் கொப்பேகடுவ நிதியமும் இணைந்து இந்த விசேட நிதியத்தை ஆரம்பித்துள்ளனர்: இந் நிதியத்திற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் உதவிகள் எதிர்பார்க்கப்படுவதாக நிதிய அமைப்பாளர்கள் தெரிவித்தனர்: உதவி வழங்குபவர்களின் பெயர்கள் பத்திரிகையில் வெளியாகும் எனவும் உபாலி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிதியம் மூலம் காயமடையும் படையினரை பராமரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. படையினரை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்த பகிரங்க கோரிக்கைக்கு அமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் இதன் மூலம் படையினர் போரிற்கு செல்ல முன்வருவர் எனவும் இந்நிதியத்தின் அமைப்பாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

# ஒளிவீச்சு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தினரினால் தயாரித்து வெளியிடப்படும் ''ஒளிவீச்சு'' வீடியோ சஞ்சிகையின் அக்டோபர் மாத வெளியீடு இன்று மாலை 5-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இது அன்றைய தின நிகழ்ச்சியில் அகன்ற திரையில் காண்பிக்கப்பட இருப்பதுடன் வழமையான சிறப்பம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

**குழம்பிப்**

தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னா பதவியை விட்டு செல்வார் என பரவலாக வெளியான செய்தியை அரசு இனித்தான் உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் அரச படையினர் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டுவரும் போரில் படையினருக்கு ஏற்பட்ட பல பின்னடைவுகளை தொடர்ந்துவைத்தியரெட்னா இம்மாத பிற்பகுதியில் ஓய்வு பெறுவார்என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ தலைமைப்பீட மாற்றங்களை படையினரில் பலர் வரவேற்றுள்ளனர். ஆனால் அதே படையினர் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவம் மேலும்பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது என்றும் கூறுகின்றனர்.

வைத்தியரட்னா ஓய்வு பெறுதல் இராணுவத்தினுள் உள்ளஉட்பூசல், கசப்புணர்வுகள் பலவற்றை நீக்கும். வைத்தியரட்னாவிற்கும் அவரின் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்கள் பெரும் செய்திகளாகின. இதன்விளைவாக சில அதிகாரிகள் ஓய்வு காலத்திற்கு முன்பாகவே பதவி ஓய்வு பெற்றதுடன் இராணுவத்திலும் விட அளவில் எவ்வளவோ சிறியதான ஆனால் தீவிர இலட்சியம் கொண்ட கெரில்லாக் குழுவிற்கு எதிரான போரில் சரியான இலக்கின்றி இயங்கும் இராணுவம் என்றதோர் வடிவையும் இராணுவம் உறுதிப்படுத்தியது.

புலிகளின் மையப்பகுதியான வடக்கில் எவ்வித எச்சரிக்கையுமின்றி அடிக்கக் கூடிய ஓர் எதிரிக்கு முன்னாள்

# ஏழாலைப் பகுதியிலும் விமானக் குண்டுவீச்சு

## 4 பேர்காயம்; 3 வீடுகள் சேதம்

ஏழாலை வடக்கு சந்திப் பகுதியில்நேற்று மாலை 6.25 மணியளவில் சியாமாச்

குண்டுவீச்சு நடைபெற்ற இலந்தை கடவைப் பகுதியில் 4 பேர் வரை சிறுகாயங்களுக்

பொதுவாக மக்கள் செறிவுள்ள -அடர்த்தி அதிகமுள்ள- பகுதிகளை நோக்கியே தாக்குதல்களை நடத்திவருகின்றது. இதன் அடிப்படையில், குடியிருப்புக்கள் அதிகம் மிக்கபகுதிகள், மக்கள் திரளாகக்கூடும்சந்தைகள், பொது இடங்கள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் பாடசாலைகள் என்பனவற்றின் மீதே தாக்குதல்களை நடத்திவருகின்றது. அண்மைக் காலக் குண்டுவீச்சுக்கள் நடைபெற்ற இடங்களை அவதானிப்பின் இதனை சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

குருநகர் பகுதியில் சிறிலங்கா விமானப்படை அண்மையில் நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும். இரண்டு தாக்குதல்களிலும் தலா பத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்துமுள்ளனர். இதற்கு அப்பகுதியில் காணப்பட்ட நெரிசலான குடியிருப்புக்களே காரணமாக அமைந்தது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சன அடர்த்திமிக்க பகுதிகளில் குருநகர், பாஷையூர் என்பன முக்கியமான பகுதிகள் ஆகும். இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்த விதத் தாக்குதலும் பல உயிர்களைப் பலி எடுக்கும் என்பதை எவருக்கும் கூறித்தான் விளங்கவேண்டும் என்பதல்ல. இந்நிலையில் இப்பகுதிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் இனப் படுகொலையைத் துரிதமாக்கும்நடவடிக்கைஎன்பதைவிட வேறு எவ்வாறு கூற முடியும்?

அத்தோடு, நேற்றைய குண்டுத் தாக்குதல்கள் இரண்டும் இரு பகுதிகளிலும் இரண்டு பெரிய கத்தோலிக்க தேவாலயங்களை அண்டியே நடத்தப்பட்டுள்ளன. மேலும் இரு தாக்குதல்கள் இடம்பெற்ற இரு பகுதிகளுக்கும் அண்மையில் சந்தைகளும் உள்ளன. ஆகையினால் குண்டுகள் எங்குவிழுந்தாலும் பெருமளவு சேதத்தை விளைவிக்கும்நோக்கிலேயே வீசப்பட்டவை என்பதில் கேள்விக்கே இடமில்லை.

மேலும் இத்தாக்குதல்கள் யாகப்பர் தேவாலயம் மீதான குண்டுவீச்சையும், பொது இடங்கள்மீது நடத்தப்படும் குண்டுவீச்சையும் கண்டித்து இரு தினங்களுக்கு முன் இப்பகுதியில் நடத்தப்பட்ட மாபெரும் மௌனப் பேரணிக்குப் பழிவாங்கும் நோக்கில் நடத்தப்பட்டதாகவும் கருத இடமுண்டு. இது சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதப்போக்கு மட்டுமல்ல, பௌத்த பேரினவாதத்தின் ஏனைய மதங்களை அச்சுறுத்தும் ஒரு நடவடிக்கையும் ஆகும்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை எந்தவழிகளிலும் நியாயப்படுத்திவிட முடியாது. சிறிலங்கா அரசின் இம்முறை வெறியானது இலங்கையில் பௌத்த-சிங்களவரைத் தவிர வேறு எந்த இனத்தினரோ, மதத்தினரோ எவரும் உரிமையுடன் வாழ்வதற்கு அருகதையற்றவர்கள் என்ற பேரினவாத சிந்தனையின் வெளிப்பாடாகும். இதனைத் தமிழ் மக்கள் எப்பொழுதோ உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனால், சிறிலங்காவுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள உலக நாடுகள் இதனைஉணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஏனெனில், சிங்களப் பேரினவாதம் புரியும் இப்படுகொலைகளுக்கு நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இந்நாடுகளே உதவி புரிகின்றன. இந்தவகையில், இனப்படுகொலையில் உதவும் நாடுகளின் பங்களிப்பும் கணிசமானதென்றேகொள்ளவேண்டும். ஆகையினால் சிறிலங்காவிற்கு உதவுபவர்கள் உதவுவதை உதவிவிட்டு பின்னர் மனித உரிமைகளைப் பேசுவதில் அர்த்தம் எதுவும் இல்லை என்பதே உண்மையாகும்.

[illegible] போடப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட குண்டுச்சன்னங்களால் சல்லடைபோடப்பட்ட சடலங்கள் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் ஆங்காங்கே அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அடுக்கிவைக்கப்பட்ட சடலங்களுக்கு அருகில் இறந்தவர்களது உறவினர் சிலர் ஓலம் எழுப்பிய வண்ணமிருந்தனர்.

சில சடலங்கள் சுவர் ஓரங்களில் அநாதரவாகக் கிடந்தன. சிலரதுசடலங்கள் உருக்குலைந்து அடையாளம் காணமுடியாதவாறு அங்குமிங்குமாகக் கிடந்தன. சிறு சிறு கல்லுக் குறுணிகள் மற்றும் கட்டட இடிபாடுகளின் சிறு சீமெந்துத் துண்டுகள் ஆகியவற்றுடன் கூட்டி வாரி அள்ளி எடுக்கப்பட்ட மனித தசைத்துண்டங்கள் தரையில் விரித்து வைக்கப்பட்ட சாக்கு ஒன்றில் ஒரு குவியலாகக் காணப்பட்டன. வாகனம் ஒன்றில் இருந்து இறக்கி எடுக்கப்பட்ட இத்தசைத் துண்டங்கள் மருத்துவ மனையின் பிரதான வாயில் கதவருகே வைக்கப்பட்டிருந்தன. சடலங்களினால் வைத்தியசாலையின் முன்பகுதி நிரம்பியிருந்தது. இவற்றைவிட காயமடைந்தவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்த வாகனங்களில் இருந்து இறக்கி எடுக்கப்பட்டனர்.

இவர்களும் எஞ்சியிருந்த வெளிநோயாளர் பகுதியை நிரப்பிக்கொண்டனர்.

இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு வசதியாக வெளிநோயாளர் பிரிவின் பல சிகிச்சைப் பிரிவுகள் சிறிது நேரம் இடைநிறுத்தப்பட்டு அப்பிரிவுகளின் மருத்துவர்கள் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு வரவழைக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களுக்கு துரித கதியில் சிகிச்சை வழங்குவதில் மருத்துவர்களும் தாதிகளும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவ்வாறு மருத்துவ மனை

சினையைத் தீர்க்கமுடியுமென நினைத்துச் செயற்பட்டால்

## மிலேச்சத்

னர். குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இவ்விரு குண்டு வீச்சிலும் 23பேர் கொல்லப்பட்டனர்.

இவ்விரு தாக்குதல்களையும் அடுத்து இரண்டு விமானங்களும் திரும்பிச்சென்றன. இதைத்தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதியை நோட்டமிட்டுச் சென்றது.

இதன்பின்னர்சுமார் 10-15 மணியளவில் மீண்டும்அப் பகுதிக்கு வந்த இரண்டு சியாமாச்செட்டி விமானங்கள் பாஷையூர் பகுதியில் தாக்குதலை நடத்தின. இத் தாக்குதல்களின் போதும் இரு தடவைகளில் நான்கு குண்டுகள் வீசப்பட்டன. இதில் இரண்டு குண்டுகள் பாஷையூர் குருத்துவ மடத்திற்கு முன்பாகவும், இரண்டு குண்டுகள் திருச்சிலுவைகன்னியார் மடத்திற்கு அருகாமையிலும் வீழ்ந்து வெடித்தன. இவ்விரு தாக்குதல்களின் போதும் இருவர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயம் அடைந்தனர். வீடுகள் பலவும் சேதமடைந்தன.

யின் வெளிநோயாளர் பகுதி காணப்பட்ட சமயம் ஐஸ்கிறீம் விற்பனைசெய்யும் வாகனம் ஒன்று மருத்துவமனைக்குள் நுழைந்தது. இவ்வாகனம் நிறைய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களது சடலங்கள் காணப்பட்டன. இச்சடலங்களுக்கிடையில் தசைத்துண்டுகளும், துண்டிக்கப்பட்ட அவயவங்களும் காணப்பட்டன. இச்சடலங்களை இறக்குவதற்கும் அவற்றை வைப்பதற்கும் ஏற்கனவே சடலங்களாலும் காயமடைந்தவர்களாலும் நிரம்பிக்கிடந்த வெளிநோயாளர் பிரிவில் இடவசதி இருக்கவில்லை. இதனால் இச்சடலங்கள் மருத்துவமனையின் பின்பக்கம் உள்ள வாயில் ஊடாக சவச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

(க)

## குருநகர்

இருந்த வீடுகள் மீதும் வீழ்ந்து வெடித்தன. இதனால் 12 அப்பாவிப் பொது மக்கள் ஸ்தலத்திலேயே உடல்சிதறிப் பலியாகினர். ஏனையோர் வைத்திய சாலைக்கு எடுத்து வரும் வழியிலும் வைத்திய சாலையிலும் பலியானார்கள். இதில் பாலகன் ஒருவரின் உடல் இரண்டாகப் பிளந்தநிலையில் மிகக்கோரமாகக் காணப்பட்டது. இதன்போது 30பேர் வரையில் படுகாயமடைந்ததுடன் ஏனையோர் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

இத் தாக்குதலினால் பேக்கரி, தேநீர்க்கடை, பலசரக்குக்கடை, இரும்புக்கடை, மற்றும் 5 வீடுகள் ஆகியன தரைமட்டமாகியதுடன் 20ற்கு மேற்பட்ட வீடுகளும் பத்திற்கு மேற்பட்ட கடைகளும் சேதமடைந்தன.

அத்துடன் அண்மையில் குண்டுவீச்சுக்கு இலக்காகி பலத்த சேதத்திற்குள்ளாகியிருந்த யாழ். புனித யாகப்பர் ஆலயம் மீண்டும் சேதமடைந்தது.

## பாசையூர்

வைக் கன்னியர்மடமும் பலத்த சேதமடைந்தன. மேலும் புனித சூசையப்பர் முதியோர் இல்லம், புனித சவேரியர் குருக்கள் கல்லூரி ஆகியனவும் சேதமடைந்தன.

மேற்படி தாக்குதல் நடைபெற்றபோது முதியோர் இல்லத்தில் 63முதியோர்கள் தங்கியிருந்தனர். இதன்போது அங்கு தங்கியிருந்தவர்களில் மேரிமாக்கிரற், எலிசபேத் ஆகிய இரு வயோதிபர்கள் குண்டுவீச்சின் அதிர்வினால் மயக்கமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர் சந்தேசிய வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது; அரசாங்கமும் சமாதானம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டும். போரினால் தீர்வு காணவே அரசு முற்படுகிறது. எனவே இதனைவிட்டு சமாதானம் என்ற ரீதியில் மட்டும் பேசுவது நல்லது. யுத்தம் ஐம்பது வருடங்கள் நீடிக்கு

இறப்பர். யுத்தத்தின் மூலம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற அரசாங்கம் நினைக்குமானால் ஒருலட்சத்திற்கும் மேலான உயிரிழப்பு ஏற்படும்.

விமானத் தாக்குதல்களை நிறுத்தி, மின்சாரவசதிகளை ஏற்படுத்தி சாதாரண மக்களின் வாழ்க்கையை சீராக்கித் தருமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறேன். என்றார்.

# ஏழாலைப் பகுதியிலும் விமானக் குண்டுவீச்சு

### 4 பேர்காயம்; 3 வீடுகள் சேதம்

ஏழாலை வடக்கு சந்திப் பகுதியில்நேற்று மாலை 6.25 மணியளவில் சியாமாச்செட்டிரக குண்டுவீச்சு விமானமொன்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது. இரு தடவைகளில் 3 குண்டுகள்வீசப்பட்டன.பனை ஒன்றிலிருந்த குளவிக்கூடொன்றை எரித்த சமயம் கொழுந்து விட்டெரிந்த ஒளியைக் கண்டே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

குண்டுவீச்சு நடைபெற்ற இலந்தை கடவைப் பகுதியில் 4 பேர் வரை சிறுகாயங்களுக்குள்ளானார்கள். 3 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. 15 பனைகள் வரை தறித்து வீழ்த்தப்பட்டதுபோல்சிதறிக் கிடந்தன. மாடுகள் சிலவும் கொல்லப்பட்டன.

இப் பகுதியில் இதையடுத்து இராணுவக் காவலரண்களிலிருந்து எறிகணைத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டது.

(09),(11)

# கருவிலிருந்த சிசு உட்பட ஒரேகுடும்பத்தில்4பேர்பலி

சிறிலங்கா விமானப்படையினர் நேற்று நடாத்திய பொதுமக்கள் மீதான குண்டுத்தாக்குதலில் பெண்மணி ஒருவரின் கர்ப்பப்பையில் இருந்த நிறைமாத சிசு ஒன்றும் கொல்லப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்த எஸ் பிரியன் மேரிபொலின் என்ற நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் கொல்லப்பட்டதுடன் இவரின் கர்ப்பப்பையிலிருந்த சிசுவும் கொல்லப்பட்டுவிட்டது,

இக்கர்ப்பிணித்தாயின் நிரோஜன் என்ற 5வயது மகனும், ஜெறினா என்ற ஒன்றரை வயதுடைய மகளும் இதே தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டனர், மற்றுமொரு மகள்படுகாயமடைந்துள்ளார்

கொல்லப்பட்ட இத்தாயின் சடலம் யாழ். போதனா மருத்துவ மனையின் வெளிநோயாளர் பகுதி மண்டபத்தின்நடுவில் வைக்கப்பட்டிருந்தது. இதற்கருகில் கொல்லப்பட்ட இரு குழந்தைகளுடைய சடலஙகளும் வைக்கப்பட்டிருந்தன. இவற்றுக்கருகில் இப்பெண்ணின் கணவன் துக்கம் தாளாது வாய்விட்டு அழுது ஓலம் செய்த வண்ணமிருந்த காட்சி பார்ப்பவர் அனைவரது நெஞ்சங்களையும் உருகவைத்தது.

இவற்றைவிட நேற்றைய குண்டுத்தாக்குதலில் மேலும் இரு கர்ப்பிணித் தாய்மாரது கருக்கள் ஸ்தலத்திலேயே சிதைவடைந்தன. இவர்களும் யாழ். போதனா மருத்துவ மனையில்சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்டிருந்தனர் (க)(நி

## இராணுவ

செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் ஜெரி டி. சில்வாவின் இடத்திற்கு கிழக்குப் பிராந்திய தளபதி லக்கி அல்கம நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பெறுதல் இராணுவத்தினுள் உள்ளஉட்பூசல், கசப்புணர்வுகள் பலவற்றை நீக்கும். வைத்தியரட்னாவிற்கும் அவரின் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்கள் பெரும் செய்திகளாகின. இதன்விளைவாக சில அதிகாரிகள் ஓய்வு காலத்திற்கு முன்பாகவே பதவி ஓய்வு பெற்றதுடன் இராணுவத்திலும் விட அளவில் எவ்வளவோ சிறியதான ஆனால் தீவிர இலட்சியம் கொண்ட கெரில்லாக் குழுவிற்கு எதிரான போரில் சரியான இலக்கின்றி இயங்கும் இராணுவம் என்றதோர் வடிவையும் இராணுவம் உறுதிப்படுத்தியது.

புலிகளின் மையப்பகுதியான வடக்கில் எவ்வித எச்சரிக்கையுமிறின் அடிக்கக்கூடிய ஓர் எதிரிக்கு முன்னாள் பல முகாம்கள் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய நிலையில் உள்ளன.

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவிற்கு அவரின் துணை அதிகாரியான சீப் ஒப் ஸ்ராபிற்கும் இடையேயும் உறவு சுமுகமாக இல்லாமலிருக்ககூடும் ஆதலால் இராணுவ மாற்றங்களின் பின்னரும் இராணுவத்தினுள் முறுகல் நிலை நிலவலாம் என்பதை இராணுவ தரப்பு ஒப்புக்கொளளகிறது. இதனிடையில் போர் முனையில் இராணுவம் பல தீவிர பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குடாநாட்டில் உள்ள பலாலி இராணுவ முகாம் பற்றியும் விமான தளம்பற்றியும் முறையான செய்திகள் வருகின்றன. சென்ற மாதம் புலிகள் சிலர் இந் நிலைகளினுள் ஊடுருவமுடிந்தது. பின்னர் இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனராம் பலாலி அழிக்கப்பட்டால் அது படையினரின் வான் பலத்தையும் அழித்து விடும் என்பதால் புலிகள் மீண்டும் முயற்சிப்பர் என எதிர்பார்க்கலாம்.

படையினர் குறைந்த வசதியுடன் போரில் தமது இலக்கு, குறிக்கோள் என்ன என்பது தெரியாமல் பரவலாக சிதறியிருக்கின்றனர் என்பது ஒரு இராணுவ நிபுணரின் கணிப்பு இதற்கு ஆசேபொறுப்பு என செய்தித்தாள் கட்டுரைகளும் ஓய்வுபெற்ற பல இராணுவ அதிகாரிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினை வெறும் பயங்கரவாத பிரச்சினை என ஜனாதிபதி கூறிவருவது இதை மேலும் குழப்பியுள்ளது பேசுவதற்கு ஒன்றுமில்லை படைகள் முழுமூச்சுடன் இறங்கி புலிகளை முறியடிக்க வேண்டும் என்ற கருத்தையே அவரின்பேச்சுக்காட்டுகிறது இது அவரின் பகல் கனவாக இருக்கலாம்.

# இராணுவத்தின் அடியும் உதையும் மறுபிறப்பு உணர்வை ஏற்படுத்தியது

## பலாலியிலிருந்து விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

இராணுவத்தினர் எம்மீது விசாரணைகள் செய்யும் போது ஏற்படுத்தும் அடியும் உதைகளும் கண்மூடித்தனமான தாக்குதல்களும் எங்களை மறுபிறப்பு எடுப்பது போன்று ஒரு உணர்வை உண்டுபண்ணியது

இவ்வாறுபலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் மூன்று வருடங்களுக்குமேலாகதடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு வந்தவர்களில் ஒருவரான சிவலிங்கம் வசந்தகலாபன் எமது வடமராட்சி செய்தியாளருக்கு விபரித்தார்.

அவர் மேலும் விபரிக்கும் போது கைது செய்கின்ற ஒவ்வொரு தமிழ் இளைஞர்களையும் குற்றவாளியாகவேகாண முற்படுவர் ஒரு நிரபராதியை குற்றவாளியாகக் காணும் வரையில் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களும் அட்டூழியங்களும் ஓயாது.

எனது மனைவி கர்ப்பவதியாக இருக்கும் போது கடலில் வைத்து கைது செய்யப்பட்ட நான் இன்று தான் முதன் முதலில் எனதுபிள்ளையைப் பார்க்கின்ற பாக்கியம் பெற்றேன் எனது பிள்ளையைக் கூட மூன்று வருடங்கள் பார்க்க முடியாதவாறு இராணுவத்தினரால் நான் தடுத்து வைக்கப்பட்டேன். பெற்றோலை எங்கள் மூக்கின் துவாரத்தினுள் ஊற்றி எங்களை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கி எம்மை அடித்துத் துன்புறுத்துவர்.

சர்வதேச செஞ்சிலுவைத் தொண்டர்கள் எம்மைப் பாரமேற்றதன் பின்னரே ஓரளவு சுதந்திரமாகவும் நிம்மதிப் பெருமூச்சுடனும் எங்களால் நடமாட முடிந்தது அவர்கள் எம்மை பாரமேற்காமல் இதுவரை இருந்திருப்போமேயானால் எங்கள் கதை என்றோ முடிந்திருக்கும்.

நான் கடலில் வைத்து 25.2.91-ம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டேன் பின்னர் காங்கேசன் துறைக்குகூட்டி செல்லப்பட்டு பின்னர் காரைநகரில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டேன் 91 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பலாலிக்கு மாற்றப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன் என்றார். (யோ)

## ஹென்றியரசர் முதலிடம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி ஹாட்லிக் கல்லூரியை ஒரு கோலினால் தோற்கடித்து முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இவ்வணிக்கு தமிழீழ மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்பட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக தமிழீழக் காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் கலந்து கொண்டனர்.



நேற்று சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டு வீச்சில் சேதமடைந்த குடியிருப்புகள்.

# மரண அறிவித்தல்கள்

## திரு. வல்லிபுரம் மகாதேவன்

தும்பளை பருத்தித்துறையைச்சேர்ந்த வல்லிபுரம் மகாதேவன் 03-12-93 இல் காலமானார். இவர் சுகிர்தரத்தினத்தின் அன்புக்கணவரும் மாவீரர் இளங்கோ(கோபி), உபேந்திரன்(நோர்வே), றோகினி (மாணவி, தொழில் நுட்பக் கல்லூரி கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 04-12-93 சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:

'திகிரி', தும்பளை, பருத்தித்துறை.

வ. கமலநாதன் (சகோதரன்)

(6783)

## அன்ரனி சாள்ஸ்

(பிரபல சின்னக்கடை வியாபாரி)

05-12-93 காலை விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமானார். இவர் அன்ரனி சின்னத்துரை திரேசம்மாவின் அன்பு மகனும் யேசுமலரின் கணவரும், கலிஸ்ரஸ், நிரோய், விமேஸ், மதன் ஆகியோரின் தந்தையாரும், தங்கரோஸ், ராணி, கிளைங்வீல் வெனிஸ், வசுமதி ஆகியோரின் சகோதரரும், சுவானி, அன்னம் ஆகியோரின் மருமகனும், தவநாயகம், தவரோஸ், புஸ்பராசா, நீக்லஸ், அலோசியஸ், சுகன்யா, பவி ஆகியோரின் மைத்துன

பலாலி தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து

# விடுவிக்கப்பட்ட 14 பேர் யாழ். வந்து சேர்ந்தனர்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் கடந்தநான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பதினான்கு பேர் விடுதலை செய்யப்பட்டு நேற்று 'வாதுவ' கப்பல் மூலம் யாழ் வந்துசேர்ந்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளின் உதவியுடன் கூட்டி வரப்பட்ட இவர்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் பின்வருவோரே பலாலி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாவர்.

சிவலிங்கம் வசந்தகலாபன் (சக்கோட்டை) தி- சூசைமுத்து (திக்கம்), சுப்பிரமணியம் ராஜன் (திக்கம்), எ. எட்வின் (சக்கோட்டை), து. சிவசோதி (வல்வெட்டித்துறை), சி. சிவஞானசுந்தரம் (சுப்பர்மடம்), ஜே.குயின்ரஸ் (குருநகர்), இமானுவேல் சகாயதாஸ் (குருநகர்), கெ. தமியாம்பிள்ளை அமலதாஸ் (குருநகர்), கி. றொமோ வோல்டர் (குருநகர்), இ. ரவிச்சந்திரன் (பெரியவிளான்), க. கண்ணன் (மாதகல்), ம கட்டையப்பா (தருநகர்), தோ. நேரணிஸ் (குருநகர்). (யோ)

# மௌன ஊர்வலத்திற்கு பழிவாங்கவே நேற்றைய விமானத் தாக்குதல்

## குருநகர் பங்குத்தந்தை நேசநாயகம் தெரிவிப்பு

அரசபடைகளின் கண்மூடித்தனமான விமானத்தாக்குதலை கண்டித்து அகிம்சை வழியில் நடத்திய பேரணிக்கு பழிவாங்கவே நேற்று விமானக்குண்டு வீச்சு நடந்துள்ளது என குருநகர் பங்குத்தந்தை அருட்திரு. ஆர் எம் ஜி நேசநாயகம் தெரிவித்தார்.

அரசபடைகள் அப்பாவி மக்கள்மீதும் ஆலயங்கள் மீதும் நடத்திய ஈவிரக்கமற்ற குண்டு வீச்சுக்களை அகிம்சை முறையில் கண்டிக்கவே மௌனப்பேரணி நடத்தப்பட்டது. அது நடந்து இரு நாட்களிற்குள் மீண்டும்யாகப்பர் ஆலயத்திலிருந்து சில யார்களுள் நடந்த நேற்றைய குண்டு வீச்சால் யாகப்பர் ஆலய சொரூபமும் சேதமடைந்தது. இதைதவறுதலாக நடத்தப்பட்டது என்று யாரும் கூறமுடியாது. ஏனெனில் உலங்குவானூர்தியின் வழிகாட்டலுடனேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

அகிம்சை வழியில் போராடவென பல்லாயிரம் மக்கள் பேதமின்றி மௌன ஊர்வலத்தில் பங்குபற்றியமையால் அரசபடைகள் மக்களை ஆத்திரமூட்டும்வகையில்இவ்வாறு செய்துள்ளனர். அரச அதிபர் விமானக்குண்டு வீச்சுகள் குறித்துபிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கூறிய போது உடனடியாக கடும்நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் கூறியிருந்தார்,

இந்த விமானக்குண்டு வீச்சு தொடர்பாகவெளிநாடுகளுக்கு தெரிவிக்கும்வகையில் உரிய நடவடிக்கையை எடுக்கவுள்ளேன் எனவும் குருநகர் பங்குத் தந்தை மேலும்தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

05- 12- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11611

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-4672, 24-4108, 28 3735, 27-8754 42-3945, 24-4465, 26-3722, 26-0032, 26-0852, 26 0407, 42-2355, 42-9220.

# சிங்களஅரசின் அரக்கத்தனத்திற்கு பலியான 25 அப்பாவித்தமிழர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மற்றும் பாசையூர்ப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது சிறிலங்கா விமானப் படையினர் நேற்றுக்காலை நடாத்திய குண்டுத்தாக்கு

பிள்ளை (42)

- சுவக்கின் தோமஸ் (60)
- வே. நாகராசா (50)
- யேசுராசா றோஸ்மலர் (48)
- அ. சாள்ஸ் (35)
- பற்றிக் செல்வராணி (40)

வரன் (46)

- ஸ்ரனிஸ்லோஸ் பிரகாசியம்மா (51)
- ப. கிருபைரத்தினம் (65)
- வில்லியம் ஜெயராசசிங்கம் (66)

ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:

'திகிரி', வ. கமலநாதன்
தும்பளை, பருத்தித்துறை. (சகோதரன்)

(6783)

## அன்ரனி சாள்ஸ்

(பிரபல சின்னக்கடை வியாபாரி)

05-12-93 காலை விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமானார். இவர் அன்ரனி சின்னத்துரை திரேசம்மாவின் அன்பு மகனும் யேசுமலரின் கணவரும், கலிஸ்ரஸ், நிரோய், விமேஸ், மதன் ஆகியோரின் தந்தையாரும், தங்கரோஸ், ராணி, கிளைங்வீல் வெனிஸ், வசுமதி ஆகியோரின் சகோதரரும், சுவானி, அன்னம் ஆகியோரின் மருமகனும், தவநாயகம், தவரோஸ், புஸ்பராசா, நீக்லஸ், அலோசியஸ், சுகன்யா, பவி ஆகியோரின் மைத்துனரும், பெரியதம்பியின் மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(6785) மனைவி, பிள்ளைகள்.

## ஜெயராசசிங்கம் வில்லியம்ஸ்

இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமலாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சமி வில்லியம்ஸ், காலஞ்சென்ற சிரோன்மணி வில்லியம்சின் மகனும், காலஞ்சென்ற அல்பேட், வில்லியம்சின், நேசமலர், பஞ்சதிருசிங்கத்தின், சகோதரரும், காலஞ்சென்ற பஞ்சதிருசிங்கம் (தேனி), இராசகோபால் (செம்பியன் செல்வன்), புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், இராகுலனின் பெறாமகனும் ஆவார். காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை, பொன்னம்மா அவர்களின் மருமகனும் ஆவார். அன்னாரின் நல்லடக்கஆராதனை அவரதுஇல்லத்தில் பி. ப. 3-30 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
புவனேஸ்வரி

மலரகம்
கோப்பாய்ச் சந்தி,
கோப்பாய். (6786)

## ஆறுமுகம் இரத்தினம் (N.A.R.)

(பிரபல கணக்குப் பிள்ளை)

காரைநகர், பலகாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் இரத்தினம் (N.A.R.) 5-12-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் நீலோசினி அம்மாவின் அன்புக் கணவரும் சற்குணராசா (ராசன்), தில்லைராசா, உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5. 12. 93 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், வர்த்தகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி: தகவல்:
51, மானிப்பாய் வீதி, மனைவி, பிள்ளைகள்.
யாழ்ப்பாணம்.
(6782)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

னர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளின் உதவியுடன் கூட்டி வரப்பட்ட இவர்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் பின்வருவோரே பலாலி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாவர்.

சிவலிங்கம் வசந்தகலாபன் தமியாம்பிள்ளை அமலதாஸ் (குருநகர்), கி. றொமோ வோல்டர் (குருநகர்), இ. ரவிச்சந்திரன் (பெரியவிளான்), க. கண்ணன் (மாதகல்), ம கட்டையப்பா (குருநகர்), தோ. நேரனிஸ் (குருநகர்). (யோ)

அரசபடைகள் அப்பாவி மக்கள்மீதும் ஆலயங்கள் மீதும் நடத்திய ஈவிரக்கமற்ற குண்டு வீச்சுக்களை அகிம்சை முறையில் கண்டிக்கவே மௌனப்பேரணி நடத்தப்பட்டது. அது நடந்து இரு நாட்களிற்குள்மீண்டும்யாகப்பர் ஆலயத்திலிருந்து சில

# சிங்கள அரசின் அரக்கத்தனத்திற்கு பலியான 25 அப்பாவித்தமிழர்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மற்றும் பாசையூர்ப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள்மீது சிறிலங்கா விமானப் படையினர் நேற்றுக்காலை நடாத்திய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட இருபத்திஐந்து பொதுமக்களின் விபரம் வருமாறு;

- எஸ்பிரியன் மேரி பொலின் (வயது-26)
- எஸ்பிரியன் நிரோஜன் (5)
- எஸ்பிரியன் ஜெறினா (1 1/2)
- சிறில் ராணி (52)
- பற்றிக் அந்தோனிப்பிள்ளை (42)
- சுவக்கின் தோமஸ் (60)
- வே. நாகராசா (50)
- யேசுராசா றோஸ்மலர் (48)
- அ. சாள்ஸ் (35)
- பற்றிக் செல்வராணி (40)
- வில்வராயர் ராணி (40)
- அன்ரன் ராணி (35)
- கியோமன் றோசாரி (40)
- மான் (70)
- பா. மயூரன் (18)
- செல்வராஜா ரஜன்சி (4)
- கந்தையா விக்கினேஸ்வரன் (46)
- ஸ்ரனிஸ்லோஸ் பிரகாசியம்மா (51)
- ப. கிருபைரத்தினம் (65)
- வில்லியம் ஜெயராசசிங்கம் (66)
- சிறில் அகஸ்ரின் சாந்தன் (11)
- கிறிஸ்தோபர் சுவக்கீன் (67)
- ரவி றியன்சி (3)
- மருதப்பா பாலசிங்கம் (68)
- ம. சிந்தாத்துரை (45)

# குருநகர் சின்னக்கடைப் பகுதியில் 45க்கும் மேற்பட்டோர் காயம்

(நமது நிருபர்)

குருநகர் சின்னக்கடைப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது சிறிலங்கா விமானப் படை குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய கோர குண்டு வீச்சுத் தாக்குதலினால் 45க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். இதில் 45 பொதுமக்களின் விபரம் வருமாறு;

சந்தியா தர்மதாஸ் (24), இரத்தினம் அருமைத்துரை (29), துளசிதாஸ் ரவி (35), ரவி வனிதா (31), ரவி பிரதீபா (09), செபஸ்தியாம்பிள்ளை அனிந்திரன் (18), சிந்தாதுரை பெனடிக்ற் (50), பாது திஸ்வில் (03), கதிரவேல் இராஜசேகர் (32), லூவிஸ் குயின்ரன் (29), திரவியன் ரவீந்திரன் (27), எஸ். லூட்சன் (03), திரேசம்மா (32), ஆபிராம்பிள்ளை றீற்றாம்மா (52), ஆபிராம்பிள்ளை சத்தியசீலன் (33), ஆபிராம்பிள்ளை அன்னலா (55), செபமாலை சிறில் (58), சிறில் கௌரி (23), சிறில் மெண்டிஸ் 52), ராஜேந்திரம் பொறின (30) அலெக்சாண்டர் அன்னம்மா (70), பாக்கியநாதர், கிஸ்லர் திரேசம்மா (37), சிறிசேனா திரேசம்மா (42), வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (63), தியாகராஜா திருநாவுக்கரசு (47), தியாகராஜா சுதன் (10), அலோசியஸ் அன்ரன் ஜெயராஜா (37), திருக்குடும்பம் தாஸ் (42), யோசேப் இம்மனுவல் (49), அருள்நாயகம் உசாந்தன் (19), இம்மனுவேல்பிள்ளை ஜெகநாதன் (45), நீக்கிலஸ் தருமநாயகம் (44), சி. மரிஸ்ரெலா (54), சி. அன்லூமீனா (22), சி. விக்டறி (19), ரவீந்திரன் திரவியம் (39), செல்வம் பற்றிக் (46), செ. கஜேந்திரன் (18), ஜோசேப் ஜோண் (75), அ. ராணி (35), ஆ. ராணி (43), பாபு கிருஷ்ணன் (05), வ. லோறன்ஸ் (56), லோ. ஆனந்தம் (46).

# விமானக் குண்டுவீச்சின் போது பாஷையூரில் காயமடைந்தோர்

பாஷையூர் பகுதி மக்கள் குடியிருப்புகள்மீது விமானப் படையால் நடாத்தப்பட்ட குண்டுவீச்சினால் காயமடைந்தோர் விபரம்:

குமாரசாமி ஆனந்தலிங்கம் (49), ஞானசீலன் எழில்வதனி (11), யோசேப் அனித்தா (21), ஏ பூலோகநாதன் (43). ஜேசுதாஸ் வேந்தன் (10), சியாவின் (05) பஸ்ரியாபிள்ளை, ஜெயராணி (48), றொசாறியன் (60), கபிரியேல் அமலதாசன் (40). கிருபரட்ணம் திரேசம்மா (64), மகாலட்சுமி (48), ம. அன்னம்மா (60), தேவதாஸ் றீற்றாம்மா (43), சியோமன் (43), ஆ. வரப்பிரகாசம் (38), கியோமன் ரமணன் (06), அருளானந்தம் ஜெயமலர் (43), எஸ்பிரியன் ஜீன்சன் (03), அருள்நாயகம் உஷாந்தன் (09), இராஜசேகரம் (32), அருளானந்தம் மலர் (38), அருளானந்தம் சுஜாத்தா (05), கபிரியேல்பிள்ளை கியோமன் (42), சிவசம்பு விஜயரங்கன் (35).

போருக்கு நெருங்கியிருந்தன திருச்சிலுவை கன்னியர் மடம் சேதமடைந்திருந்தது என அவர் மேலும் கூறினார்.

அகிம்சை வழியில் போராடவென பல்லாயிரம் மக்கள் பேதமின்றி மௌன ஊர்வலத்தில் பங்குபற்றியமையால் அரசபடைகள் மக்களை ஆத்திரமூட்டும் செயல்களை ... களுக்கு தெரிவிக்கும்வகையில் உரிய நடவடிக்கையை எடுக்கவுள்ளேன் எனவும் குருநகர் பங்குத் தந்தை மேலும்தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 05- 12- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11611

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-4672, 24-4108, 28 3735, 27-8754 42-3945, 24-4465, 26-3722, 26-0032, 26-0852, 26 0407, 42-2355, 42-9220.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்



அமரர்

### செல்வநாயகம் விசாகசுந்தரம்

மலர்வு: 1917. 10. 08 உதிர்வு: 1993 11. 22

எமது அன்பு நிறைந்த, அருமை மிகுந்த எமது தலைவர் செல்வநாயகம் விசாகசுந்தரம் அவர்கள் 22. 11. 1993 இல் திடீரென இறைபதமெய்தி எம்மையெல்லாம் திகைப்பிலும் மனவேதனையிலும் ஆழ்த்தியிருந்த போதும் 23. 11. 1993 இல் நேரில் கலந்து கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், வங்கி ஊழியர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 07. 12. 1993 செவ்வாய்க்கிழமை நடைபெறும் எமது தலைவரின் 16ஆவது நாள் நினைவஞ்சலி, அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7, கலட்டி வளவு, - குடும்பத்தினர்
பருத்தித்துறை.

(6784)

# பூநகரியில் வரலாறு படைத்த வேங்கைக்கு வீர வணக்கம்



முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி

## லெப். கேணல் அன்பு

(பொன்னம்பலம் சரவணபவான்)
கௌதாரிமுனை பூநகரி
தற்போதைய முகவரி: கந்தையா லேன், சாவகச்சேரி

பிறப்பு:
**1966. 09. 25**

வீரச்சாவு:
**1993. 11. 12**

எல்லைகள் மீட்பதுவே உன் எண்ணம்!
சொல்லுக்குள் சிக்காத சிற்பமே உன் வீரம்!
வில்லிருந்து புறப்பட்டஅம்பெனவேவிரைந்தாய் - உன்
இலட்சியம் ஈடேற ஓய்வின்றி உழைத்தாய்!

ஈழநாதம்